

வருவாய்த்துறையின் சார்பில் நேற்று (13.08.2024) மேயர் ஆர்.பிரியா, மேயரின் நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, வருவாய்த் துறையில் வழங்கப்படும் புதிய மறுமதிப்பீடு, சொத்துவரி மதிப்பீடு, சொத்துவரி பெயர் மாற்றம், தொழில் உரிமம் அறிவிப்பு ஆகிய ஆணைகளின் உண்மைத்தன்மையை கண்டறிவதற்கான விரைவுத் தகவல் குடியீட்டினையும் (QR Code), இதனை பயனாளர் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து அறிவிப்பு நகல் எடுத்திடும் பயன்பாட்டினையும், சமூகநலக் கூடங்களை இணையவழி மூலம் முன்பதிவு செய்தல் நடவடிக்கையையும் பயன்பாட்டிற்கு ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் தொடங்கி வைத்தார். இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமரகுருபரன், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர்ந.இராமலிங்கம், கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ப) நிதி) ஆர்.லலிதா, நிலைக்குழுத் தலைவர் சர்பஜெயாதாஸ் நரேந்திரன் (வரிவிதிப்பு மற்றும் நிதி), மாநகர வருவாய் அலுவலர் திரு. சுகுமார் சிட்டி பாபு மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### சென்னை மாநகராட்சி மேயர் நிதிநிலை அறிக்கையின்படி

# வருவாய்த்துறை - கல்வித்துறை சார்ந்த விரைவுத் தகவல்கள்!

## மேயர் ஆர்.பிரியா தொடங்கி வைத்தார்!

சென்னை, ஆக.14-

மேயர் அவர்களின் நிதி நிலை அறிக்கை அறிவிப்பின்படி, வருவாய்த்துறை மற்றும் கல்வித்துறை சார்ந்த அறிவிப்புகளை மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் நேற்று செயல்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.

மேயர் அவர்களின் 2023-24 மற்றும் 2024-25-ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பின்படி, வருவாய்த்துறையில் வழங்கப்படும் புதிய / மறுமதிப்பீடு, சொத்துவரி மதிப்பீடு, சொத்துவரி பெயர் மாற்றம், தொழில் உரிமம் அறிவிப்பு ஆகிய ஆணைகளின் உண்மைத்தன்மையை கண்டறிவதற்கான விரைவுத் தகவல் குடியீட்டினையும் (QR Code), இதனைப் பயனாளர் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து அறிவிப்பு நகல் எடுத்திடும் பயன்பாட்டினையும், சமூகநலக் கூடங்களை இணையவழி மூலம் முன்பதிவு செய்தல் செயல்பாட்டினையும் மேயர் திருமதி ஆர்.பிரியா அவர்கள் நேற்று (13.08.2024) ரிப்பன் கட்டட வளாகக் கூட்டரங்கில் பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.

தொடர்ந்து, 2024-25-ஆம் ஆண்டிற்கான நிதி நிலை அறிக்கை அறிவிப்பின்படி, கல்வித்துறையின் சார்பில் சென்னை பள்ளிகளில் பயிலும் தேசிய மாணவர் படை மற்றும் சாரண, சாரணியர் மாணவ, மாணவியருக்கு சீருடைகளை மேயர் ஆர்.பிரியா வழங்கினார்.

**வருவாய்த்துறை**

மேயர் அவர்கள் 2024-25-ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில், வருவாய்த்துறையால் வழங்கப்படும் புதிய/மறு மதிப்பீடு, சொத்துவரி மதிப்பீடு, சொத்துவரி பெயர் மாற்றம், தொழில் உரிமம் உள்ளிட்ட ஆவணங்களின் உண்மைத் தன்மையை பொதுமக்கள் அறியும் வகையிலான விரைவுத் தகவல் குறியீடு (QR Code) தொழில்நுட்பப் பயன்பாடு நடைமுறைப்படுத்தப்படும் எனவும், வருவாய்த்துறையால் வழங்கப்படும் புதிய/மறு மதிப்பீடு, சொத்துவரி மதிப்பீடு, சொத்துவரி பெயர் மாற்றம், தொழில் உரிமம் உள்ளிட்ட ஆவணங்களை பயனாளர்கள் இணையதளம் வாயிலாக பதிவிறக்கம் செய்து நகல் எடுத்திட வழிவகை ஏற்படுத்தப்படும் எனவும், 2023-24ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை அறிவிப்பில், பெருநகர சென்னை மாநகராட்சியின் சமூகநலக் கூடங்களை முன்பதிவு செய்யும் முறையினை இணையவழி வாயிலாக மேற்கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும் எனவும் அறிவிக்கப்பட்டது.

இதனை நிறைவேற்றும் வகையில், மேயர் அவர்கள் வருவாய்த்துறையில் விரைவுத் தகவல் குறியீடு (QR Code) தொழில்நுட்ப பயன்பாடு மற்றும் இணையதளம் மூலம் பதிவிறக்கம் செய்து நகல் எடுத்தல் மற்றும் சமூக நலக் கூடங்களை இணையவழி வாயிலாக முன்பதிவு செய்தல் ஆகிய அறிவிப்புகளை இன்று பயன்பாட்டிற்குத் தொடங்கி வைத்தார்.

**கல்வித்துறை**

மேலும், மேயர் அவர்கள் 2024-25ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கை அறிவிப்பின் படி, 2024-25ஆம் ஆண்டு கல்வியாண்டில் சென்னை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளி களில் தேசிய மாணவர் படை மற்றும் சாரண, சாரணியர் மாணவர்களுக்கு ரூ.66 இலட்சம் மதிப்பில் பயிற்சி மற்றும் சீருடைகள் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டது.

இதனைத் தொடங்கி வைக்கும் விதமாக, முதற்கட்டமாக 2024-25ஆம் கல்வியாண்டில் பெருநகர சென்னை மாநகராட்சியின் கல்வித்துறையின் கீழ் இயங்கும் சென்னை பள்ளி தேசிய மாணவர் படை (NCC) மாணவ, மாணவியரில் எம்.எச்.சாலை சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் 50 மாணவிகள், சைதாப்பேட்டைசென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 100 மாணவிகள் மற்றும் சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 100 மாணவர்கள், பந்தர் கார்டன் சென்னை மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 50 மாணவர்கள், எம்.ஜி.ஆர். நகர்சென்னை மேல்நிலைப்பள்ளியில் பயிலும் 100 மாணவர்கள் என மொத்தம் 400 தேசிய மாணவர் படை மற்றும் சாரண, சாரணியர் மாணவர்களுக்கு மேயர் அவர்கள் ரூ.11,82,300 மதிப்பிலான சீருடைகளை இன்று வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், துணை மேயர் மு.மகேஷ்குமார், ஆணையாளர் ஜெ.குமர குருபரன், மாமன்ற ஆளுங்கட்சித் தலைவர் ந.இராமலிங்கம், கூடுதல் ஆணையாளர் (வருவாய் (ம) நிதி) திருமதி ஆர்.லலிதா, இணை ஆணையாளர் (கல்வி) முனைவர் ஜெ.விஜயா ராணி, நிலைக்குழுத் தலைவர்கள் த.விசுவநாதன் (கல்வி), திருமதி சர்பஜெயாதாஸ் நரேந்திரன் (வரிவிதிப்பு மற்றும் நிதி), மாநகர வருவாய் அலுவலர் சுகுமார் சிட்டி பாபு மற்றும் வருவாய்த்துறை, கல்வித்துறை அலுவலர்கள், ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

# புதுச்சேரி மொழியியல் ஆராய்ச்சி நிறுவனம் மூடுவிழாவை நோக்கி செல்கிறது!

## புதுச்சேரி பேரவையில் இரா.சிவா பேச்சு!



புதுச்சேரி, ஆக. 14-

புதுச்சேரி மொழியியல் ஆராய்ச்சி நிறுவனம் மூடு விழா நோக்கி சென்று கொண்டிருப்பதை இப்பேரவையின் கவனத்திற்கு கொண்டு வருவது சம்பந்தமாக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா பேசியதாவது: -

புதுச்சரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் 1986-ஆம் ஆண்டு முதல் இயங்கி வருகிறது. கலை, பண்பாட்டுத் துறையின் கீழ் செயல்படும் இந்நிறுவனம், மாநிலத்தில் உள்ள கவிஞர்கள், மானிடவியல், இலக்கியம், பண்பாட்டு தளங்களை ஆய்வு செய்து, ஆவணப்படுத்துவதை முக்கிய இலக்காக கொண்டு செயலாற்றி வருகிறது. அத்துடன் எம்.பில்., பி.எச்.டி., படிப்புகளையும் நடத்தி, ஆய்வாளர்களுக்கு பட்டங்களை வழங்கி வருவதோடு, பிற மாநிலத்திலும் மற்றும் நாட்டினருக்கு தமிழ் கற்பிக்கப்படுகிறது.

இலக்கியம், மொழியியல், பண்பாட்டு இயல் என மூன்று துறைகளை கொண்டுள்ள இந்நிறுவனத்தில் 12 பேராசிரியர்கள் பணியாற்றி வந்தவர். ஆனால் இன்றைக்கு நிறுவனத்தில் ஒரு பேராசிரியர் கூட பணியில் இல்லை. கடந்த இரண்டு ஆண்டுகளாக மொழியியல் பண்பாட்டு நிறுவனத்திற்கு பி.எச்.டி., படிப்பில் ஒரு மாணவர் கூட சேர்க்கப்படவில்லை.

கலை, பண்பாட்டுத் துறை இயக்குநர் பொறுப்பு அடிப்படையில் இந்நிறுவனத்தை கவனித்து வருகிறார். பத்து பேர் இருக்க வேண்டிய அலுவலகத்தில் ஒரு யுடிசி, ஒரு உதவியாளர், ஒரு டேட்டா என்ட்ரி ஆபரேட்டர், ஒரு நூலகர் என நான்கு பேர் மட்டும் பணியாற்றி வருகிறார்கள். மற்றவர்கள் வேறு துறைகளுக்கு மாறிவிட்டனர்.

மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம் சொசைட்டியாகத்தான் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. எனவே, மத்திய தேர்வாணையம் வரை கோப்பு அனுப்பி காலியிடங்களை நிரப்ப தேவையில்லை. மாநில அரசே முடிவு செய்து, பேராசிரியர் பணியிடங்களை நிரப்பலாம். கடந்த ஆண்டு 9 பேராசிரியர் பணியிடங்கள் நிரப்பப்படும் என் இப்பேரவையில் தெரிவிக்கப்பட்டது. ஆனால் இன்னும் நிரப்பப்படவில்லை.

ஆகவே, புதுச்சேரி அரசு மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் உள்ள காலிப்பணியிடங்களை புதுச்சேரியில் தமிழில் எம்.பில்., பி.எச்.டி., முடித்த பட்டதாரிகளை கொண்டு நிரப்பி மீண்டும் அந்நிறுவனத்திற்கு புத்துயிர் அளிக்க வேண்டும் என்று இந்த அவையின் வாயிலாக அரசை வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன் என அவர் பேசினார்.





சிங்காரச் சென்னை 2.ஓ திட்டத்தின் கீழ், இராயபுரம் மண்டலம், 52வது வார்டு, ஆஞ்சநேயா நகர், பழைய ஆட்டுத்தொட்டி தெருயில் ரூ.1.93 கோடி மதிப்பீட்டில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தெலுங்கு ஆரம்பப் பள்ளிக் கட்டிடத்தை இராயபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் ஐட்ரீம் மூர்த்தி திறந்து வைத்தார். இந்நிகழ்வில் மேற்குப் பகுதிச் செயலாளர் வ.பெ.சுரேஷ், மாமன்ற உறுப்பினர் திருமதி.கீதா சுரேஷ், மண்டல அதிகாரி தமிழ்ச் செல்வன், வட்டச் செயலாளர் எஸ்.புகழேந்தி, அதிகாரிகள் பழநி, பிரபு, மாவட்ட பகுதி வட்ட கழக நிர்வாகிகள், அணிகளின் நிர்வாகிகள், ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பலர் இருந்தனர்.

# விடுதலைத் திருநாள் விழா!

## தி.மு.க. தலைமைக் கழகம் - அண்ணா அறிவாலயத்தில் 15.8.2024 அன்று காலை சரியாக 8 மணிக்கு தேசியக் கொடி ஏற்றப்படுகிறது!

வருகிற 15.8.2024 வியாழக்கிழமை இந்திய நாட்டின் விடுதலை திருநாளினையொட்டி, கடந்த ஆண்டுகளைப் போலவே, இந்த ஆண்டும் தி.மு.க. தலைமைக் கழகமான அண்ணா அறிவாலயத்தில் காலை சரியாக 8.00 மணிக்கு கழக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, தேசியக் கொடி ஏற்றி வைக்கிறார்.

சென்னை வடக்கு - சென்னை வடகிழக்கு - சென்னை கிழக்கு -சென்னை மேற்கு - சென்னை தென்மேற்கு - சென்னை தெற்கு ஆகிய மாவட்டக் கழகங்களைச் சார்ந்த நிர்வாகிகள் மற்றும் கழகத் தோழர்கள் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

நாள் : 13 -08- 2024.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### எஸ்.எஸ்.எல்.விடி3 ராக்கெட் ஏவுதல் ஒத்திவைப்பு:

# இ.ஒ.எஸ்.8 செயற்கைக்கோள் ஆக.16ஆம் தேதி விண்ணில் ஏவப்படும்!

## இஸ்ரோ தகவல்!

சென்னை, ஆக.14-

புவி கண்காணிப்பு செயற்கைகோள் இஒஎஸ்8 ஆகஸ்டு 15ம் தேதிக்கு பதில் ஆக.16ம் தேதி விண்ணில் ஏவப்படும் என இஸ்ரோ தெரிவித்துள்ளது. இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனமான இஸ்ரோ சந்திரயான் 3, ஆதித்யா எல் 1 ஆகிய விண்வெளி திட்டங்களை சிறப்பாக செயல்படுத்தி விண்வெளி ஆராய்ச்சியில் இந்தியாவை உலக நாடுகள் உற்றுநோக்கும் வகையில் செயல்பட்டு வருகிறது. மேலும் மனிதர்களை விண்வெளிக்கு அனுப்பும் ககன்யான் திட்டத்தை செயல்படுத்தி வருகிறது. இது போன்ற பெரிய திட்டங்களை ஒரு பக்கம் செயல்படுத்தினாலும் வானிலை ஆராய்ச்சி, புவி கண்காணிப்பு ஆகிய பணிகளுக்காக செயற்கைகோள்களை ஏவி வருகிறது.

அந்தவகையில் புவி கண்காணிப்பு செயற்கைகோளான இஒஎஸ்8, எஸ்எஸ்எல்விடி3 சிறிய செயற்கைகோள் ஏவுதல் வாகனம் மூலம் ஆக.15ம் தேதி சுதந்திர தினத்தன்று ஆந்திரப் பிரதேசத்தில் உள்ள ஹரிகோட்டாவில் இருந்து ஏவப்படும் என்று இஸ்ரோ தெரிவித்திருந்தது. இந்நிலையில் இந்த திட்டத்தில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாகவும், இந்த ராக்கெட் ஆகஸ்டு 16ம் தேதி காலை 9.17 மணிக்கு விண்ணில் செலுத்தப்படும் என்றும் இஸ்ரோ தெரிவித்துள்ளது. இஒஎஸ்8 செயற்கைகோளின் முதன்மை நோக்கம், மைக்ரோசாட்லைட்டை வடிவமைப்பது மற்றும் உருவாக்குவது, மைக்ரோசாட்லைட் பஸ் ஸுடன் இணக்கமான பேலோட் கருவிகளை உருவாக்குவது மற்றும் எதிர்காலத்தில் செயற்கைகோள்களுக்கு தேவையான புதிய தொழில்நுட்பங்களை இணைப்பது ஆகியவை ஆகும்.

இஒஎஸ்8 செயற்கைகோள் எலக்ட்ரோ ஆப்டிகல் இன்ஃப்ராரெட் பேலோடு (இஒஐஆர்), குளோபல் நேவிகேஷன் சாட்டிலைட் சிஸ்டம் ரிஃப்ளெக்டோமெட்ரி பேலோட் (ஜிஎன்எஸ்எஸ் ஆர்) மற்றும் எஸ்ஐசி யுவி டோசிமீட்டர் ஆகிய மூன்று பேலோடுகளைக் கொண்டுள்ளது. இஒஐஆர் கருவி, செயற்கைகோள் அடிப்படையிலான கண்காணிப்பு, பேரிடர் கண்காணிப்பு, சுற்றுச்சூழல் கண்காணிப்பு, இரவும் பகலும், மிட்வேவ் ஐஆர் (எம்ஐஆர்) மற்றும் லாங்வேவ் ஐஆர் (எல்விஐஆர்) பேண்டுகளில் படங்களை எடுக்க வடிவமைக்கப்பட்டுள்ளது. எரிமலை கண்காணிப்பு, தொழில்துறை, மின் நிலைய பேரிடர் கண்காணிப்பு ஆகியவற்றுக்கு இந்த செயற்கைகோள் உதவியாக இருக்கும் என்று இஸ்ரோ விஞ்ஞானிகள் கூறினர்.

